நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## M.C. No. 9 /2024

## P.W. 1 –ன் வாக்குமூலம்

**( சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | தனலட்சுமி |
| தந்தை / கணவர் பெயர் | : | மாதையன் |
| கிராமம் | : | பெருமானூர் |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 1** |
| வயது | : | 28 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2025–ஆம் வருடம், அக்டோபர் மாதம், 13–ம்ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**எதிர் மனுதாரர் ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 03.28PM.

1. நான் பெருமானூரில் குடியிருக்கிறேன். நான் தேங்காய் உரிக்கும் கூலி வேலை செய்கிறேன். நான் எனது கணவருக்கு எதிராக ஜீவனாம்சம் கோரி மனுவை தாக்கல் செய்துள்ளேன். 2வது மைனர் மனுதாரர் எனது மகள் ஆவார். எனது மனுவின் சங்கதிகளை நிரூபிக்கும் பொருட்டு எழுத்துபூர்வமான பிரமாண

பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன். அதில் சங்கதிகள் எனக்கு தெரியும். **திருமண அழைப்பிதழ் ம.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு ம.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது மகளின் பிறப்பு சான்றிதழ் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு ம.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஆகவே மனுப்படி எனக்கு ஜீவனாம்சம் வழங்க உத்தரவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன். எதிர் மனுதாரர் குறுக்கு விசாரணைக்காக முதல் விசாரணையின் தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–03.35PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/– நா. கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**